**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 360/2018.**
**வழக்கு சாட்சி – அ.சா. 1.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. முஸ்தபா கனி. | ஜாதி | |
| தந்தை பெயர் | முகமது இஸ்மாயில். | தொழில் விவசாயம். | |
| கிராமம் | உத்தமபாளையம். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 60/2025. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.10.2025.

**(1, 4, 5, 6, 7, 9 ஆகிய எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, உத்தமபாளையத்தில் குடியிருந்துகொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். ஜெயவீரன், பார்வதியம்மாள், துரைசிங்கம், மன்மதன், சுந்தர், செல்வன், அன்பழகன், பஞ்சவர்ணம், ரத்தினம் ஆகிய எதிரிகள் அனைவரும் எங்கள் நிலத்தை மோசடியாகப் பத்திரப் பதிவு செய்தார்கள் என்ற அடிப்படையில் தெரியும். கடந்த 24.06.1995–ம் தேதியன்று நானும், என் சகோதரர்கள் ஜபருல்லா கனி, கரீம் கனி ஆகியோர்கள் சேர்ந்து காக்கில்சிக்கையன்பட்டியைச் சேர்ந்த பொன்னையா, லட்சுமி என்பவர்களிடம் அனுந்தன்பட்டி கிராமத்தில் சர்வே எண். 428/1, 428/2–ல் 1 ஏக்கர் 30 செண்ட் நிலத்தை கிரையம் பெற்று, அனுபவித்து வந்தோம். அதை என் சகோதரர் அகமது கனி என்பவர் விவசாயம் செய்து வந்தார். அவர் இறந்தவுடன், கருணாநிதி என்பவருக்கு நாங்கள் குத்தகைக்கு விட்டுவிட்டோம். கருணாநிதி தனக்குக் கட்டுப்படியாகவில்லை என்று நிலத்தை எங்கள் வசம் ஒப்படைத்துவிட்டார். தற்போதுவரை மேற்படி நிலம்

எங்களது பாத்தியத்தில்தான் இருந்து வருகிறது. எங்கள் குடும்ப சூழ்நிலை காரணமாக நிலத்தின்பேரில் கடன் வாங்குவதற்காக உத்தமபாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்கச் சான்று எடுக்கும்போது, ஜெயவீரன் வகையறா, அன்பழகன், மன்மதன், துரைசிங்கம் மற்றும் சுமார் 6 அல்லது 7 பேர்கள் போலியாக மேற்படி நிலத்தை கிரையம் செய்தது தெரியவந்தது. அது சம்பந்தமாக மாவட்டக் குற்றப் பிரிவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது, இந்நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. தற்போது, இந்நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் சின்னவீரணத்தேவர், பார்வதியம்மாள், மூக்கையா, சுருளி என்ற தமிழ்மாறன், ஜெயவீரன், தியாகராஜன், நடராஜன், கங்காதரன் ஆகியோர்கள் லட்சுமி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்த ஆவண எண். 107/1990 என்ற எண்ணாகப் பாதியப்பட்ட சான்றிட்ட நகல் ஆவணமாகும். அந்த ஆவணம் அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. தற்போது, இந்நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் லட்சுமியம்மாள் என்பவர் எனக்கும், எனது அண்ணன் ஜபருல்லா கனி, கரீம் கனி ஆகியோர்களுக்கு பதிவு செய்துகொடுத்த பதிவு ஆவண எண். 531/1995 என்ற எண்ணாகப் பாதியப்பட்ட சான்றிட்ட நகல் ஆவணமாகும். அந்த ஆவணம் அ.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. தற்போது, இந்நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மேற்படி சர்வே எண்களுக்கான வில்லங்கச் சான்றிதழ் ஆவணம் ஆகும். அது அ.சா.ஆ.4 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. தற்போது, இந்நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் லட்சுமி என்பவரது பெயரில் உள்ள பட்டா ஆவணம் ஆகும். அது அ.சா.ஆ.5 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. இது

சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

அ.சா.ஆ.1–ஆன புகாரானது தேனி, மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகாரில் கண்ட சொத்தானது எந்த காலத்திலும் எங்களது கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றாலும், அதனை கருணாநிதிக்கு நாங்கள் குத்தகைக்கு விடவில்லை என்றாலும், தற்போதுவரை எங்களது சுவாதீனத்தில் இருப்பதாகக் கூறுவதும் பொய் என்றாலும் சரியல்ல. புகாரில் கண்ட சொத்தானது தற்போதுரை வரை, 6–வது எதிரி செல்வன் என்பவரின் சுவாதீனத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. கடந்த 26.04.1995–ஆம் வருடம் புகாரில் கண்ட சொத்தை நாங்கள் கிரையம் பெற்றோம் என்றால் சரிதான். அ.சா.ஆ.4 வில்லங்கச் சான்றிதழில் 1990–ஆம் ஆண்டுவரைதான் பதிவு உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்றதாகச் சொல்லப்படும் சொத்துக்களின் சர்வே எண்கள் 428/1–ல் 1 ஏக்கர் 15 செண்டில் தென்பக்கம் 1 ஏக்கர் 8 செண்டும், 428/2 –ல் உள்ள 2 ஏக்கரில் கீழ்ப்பக்கம் 12 செண்டும் ஆக மொத்தம் 2 ஏக்கரும், 428/2–ல் மேல்ப்பக்கம் 68 செண்டும் மற்றும் 22–1/3 செண்டும் புஞ்சையும் கிரையம் வாங்கியுள்ளோம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் கிரையம் பெற்றதாகச் சொல்லப்படும் காலகட்டத்திற்கு முன்பாகவே, மேற்படி சர்வே எண்கள் ரீசர்வேப்படி 428/1A, 428/1B, 428/2D என்று சர்வே செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் சொத்தைக் கிரையம் பெறும் சமயத்தில் சொத்திற்குரிய பழைய புல எண் குறித்து வில்லங்கச் சான்றிதழ்

கேட்டால், அந்த வில்லங்கச் சான்றிதழில் புதிய புல எண்களுக்குரிய பதிவு இடம் பெறாது என்றால் சரியல்ல.

கடந்த 30.01.1990-ம் தேதியன்று, 1) சின்னவீரணத்தேவர், 2) அவருடைய மனைவி பார்வதியம்மாள் மற்றும் 3) ஜெயவீரன், 4) மூக்கையா வகையறாவிடம் வாங்கிய கிரைய ஆவணம் உத்தமபாளையம் சார்பதிவக ஆவண எண். 107/1990-ன்படி லட்சுமியம்மாள், பொன்னையா ஆகியோர்கள் கிரையம் பெற்று, பின்னர் அவர்களிடமிருந்து நானும் என்னுடைய சகோதரர்களும் கிரையம் பெற்றோம் என்றால் சரிதான். லட்சுமியம்மாள், பொன்னையா ஆகியோர்கள் கிரையம் பெறுவதற்கு முன்பே, சின்னவீரணத்தேவர் வகையறா புகாரில் கண்ட சொத்தை கடந்த 22.11.1985 – ஆம் ஆண்டில் அனுமந்தன்பட்டி MD Special No. 53 வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் ஆவண எண். 1494/1985-ன்படியும், அதன் தொடர்ச்சியாக லட்சுமியம்மாள் என்பவர் 115/1989-ன் படியும், ஈட்டு அடைமானம் பெற்று, வில்லங்கம் இருந்தது என்றால் சரியல்ல. கடந்த 06.09.1993-ஆம் தேதி பெரியகுளம் கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் அவர்கள் L.No. 4/1993-ல் பிறப்பித்த உத்தரவுப்படிபுகார் சொத்தின் மீது ஏற்பட்டுள்ள ஆவண எண்களான 115/1989, 107/1990, 1079/1985, 204/1990, 970/1990 மற்றும் 845/1991 ஆகிய எண்களில் கண்ட ஆவணங்கள் இரத்து செய்யப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியும் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. மேற்படி விவரங்கள் எனக்குத் தெரியும் என்றாலும், அதனைத் தெரிந்துகொண்டே, நானும், என் சகோதரர்களும், லட்சுமியம்மாள், பொன்னையா ஆகியோர்களிடமிருந்து கடந்த 24.06.1995-ம் ஆண்டில் மோசடியாக கிரையம் பெற்றோம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கிரைய ஆவணத்தின் அடிப்படையில்

உத்தமபாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 191/1999 என்ற வழக்கில், நானும், என் சகோதரர்களும், ஜெயவீரன், உத்தமபாளையம் சார்பதிவாளர், பெரியகுளம் மாவட்டப் பதிவாளர் ஆகியோர்கள் மீது தாக்கல் செய்து, அதில் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி அது எங்கள் தவறுகைக்காக அந்த வழக்குத் தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரியல்ல. நாங்கள் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. மேற்படி தள்ளுபடி உத்தரவின்மீது, உத்தமபாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இடைக்கால மனு எண். 380/2003-ஐத் தாக்கல் செய்து, அந்த மனு கடந்த 19.01.2004-ம் தேதி தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவு மீது இன்றுவரை நாங்கள் எந்தவித மேல்முறையீடும் செல்லவில்லை என்றால் சரியல்ல. கடந்த 08.09.1998- ஆம் தேதி மேற்படி சின்னவீரத்தேவரின் மனைவி பார்வதியம்மாள் மற்றும் அவரது மக்கள் மூக்கையா, ஜெயவீரன் ஆகியோர்கள் சேர்ந்து, மேற்படி சின்னவீரணத்தேவர், அனுந்தன்பட்டி கூட்டுறவு வங்கியில் வாங்கிய அடைமானக் கடனை செலுத்தி, இரசீது பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி கடனை நானும், என் சகோதரர்கள் சேர்ந்து கட்டினோம். அதற்கு எங்களது பெயரில் இரசீது கொடுத்துள்ளார்கள். அந்த ரசீதை நான் போலீசாரிடம் காண்பித்தேனா என்றால் ஞாபகமில்லை. நானும், என் சகோதரர்களும் மேற்படி கடனைக் கட்டவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த லட்சுமியம்மாள் அவர்கள் பெற்ற கிரையம் இரத்து செய்யப்பட்ட பின்பு, அதனடிப்படையில் நாங்கள் பெற்ற கிரையத்தின் மூலம் எங்களுக்கு எந்தவொரு உரிமையும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. கடந்த 28.01.2005-ம் தேதி சின்னவீரணத்தேவர் மனைவி பார்வதி மற்றும் அவரது வகையறாக்கள், புகாரில் கண்ட சொத்தை

பெரியசுந்தத்தேவர் மகன் துரைசிங்கம் என்பவருக்கு கிரையம் கொடுத்து, மேற்படி துரைசிங்கம் அனுபவத்தில் இருந்து வந்து, 6–வது எதிரி செல்வன் கடந்த 09.07.2008–ம் தேதி கிரையம் பெற்று நாளது தேதி வரை சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நானும், என் சகோதரர்களும், லட்சுமியம்மாள் கிரையம் பெற்ற 107/1990 என்ற ஆவணத்தை இரத்து செய்தது தவறு என தேனி, மாவட்டப் பதிவாளர் அவர்களிடம் மனுக் கொடுதோம் என்றால் சரிதான். மேற்படி மனு எங்களுக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்குத் தெரியவில்லை. நானும், என் சகோதரர்களும், லட்சுமியம்மாள் பெயரில் ஏற்பட்ட கிரையம் இரத்து செய்யப்பட்டது தெரிந்தே, அவரிடமிருந்து மோசடியாகக் கிரையம் பெற்றோம் என்றாலும், எதிரிகளிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டு, நான் பொய்யாகச் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>**மறுவிசாரணை :**</u>

இல்லை.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2025.10.08 17:26:02 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**